# حِزْبُ النَّصْرِ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ .

اَللّٰهُمَّ بِسَطْوَةِ جَبَرُوْتِ قَهْرِكَ ○ وَبِسُرْعَةِ اِغَاثَةِ نَصْرِكَ وَبِغِيْرَتِكَ
لِاِنْتِهَاكِ حُرُمَاتِكَ ○ وَبِحِمَايَتِكَ لِمَنِ احْتَمٰى بِآيَاتِكَ ○ نَسْئَلُكَ
يَا اللهُ يَا سَمِيْعُ يَا قَرِيْبُ يَا مُجِيْبُ يَا سَرِيْعُ يَا مُنْتَقِمُ يَا شَدِيْدَ الْبَطْشِ
يَا جَبَّارُ يَا قَهَّارُ يَا مَنْ لَا يُعْجِزُهٗ قَهْرُ الْجَبَابِرَةِ ○ وَلَا يَعْظُمُ عَلَيْهِ اِهْلَاكُ
الْمُتَمَرِّدَةِ مِنَ الْمُلُوْكِ وَالْاَكَاسِرَةِ ○ اَنْ تَجْعَلَ كَيْدَ مَنْ كَادَنِيْ فِيْ نَحْرِهٖ ○
وَمَكْرَ مَنْ مَّكَرَبِيْ عَائِدًا عَلَيْهِ ○ وَحُفْرَةَ مَنْ حَفَرَلِيْ وَاقِعًا فِيْهَا ○ وَمَنْ
نَّصَبَ لِيْ شُبْكَةً مُصَادًا فِيْهَا وَاَسِيْرًا لَّدَيْهَا ○ اَللّٰهُمَّ بِحَقِّ كٓهٰيٰعٓصٓ
اِكْفِنَا هَمَّ الْعِدَا ○ وَلَقِّهِمِ الرَّدَا ○ وَاجْعَلْهُمْ لِكُلِّ حَبِيْبٍ فِدًا ○ وَسَلِّطْ
عَلَيْهِمْ عَاجِلَ النِّقْمَةِ فِي الْيَوْمِ وَالْغَدِ ○ اَللّٰهُمَّ بَدِّدْ شَمْلَهُمْ ○ اَللّٰهُمَّ
فَرِّقْ جَمْعَهُمْ ○ اَللّٰهُمَّ اَقِلَّ عَدَدَهُمْ ○ اَللّٰهُمَّ فُلَّ حَدَّهُمْ ○ اَللّٰهُمَّ اجْعَلِ
الدَّائِرَةَ عَلَيْهِمْ ○ اَللّٰهُمَّ اَرْسِلِ الْعَذَابَ اِلَيْهِمْ ○ اَللّٰهُمَّ اَخْرِجْهُمْ عَنْ
دَائِرَةِ الْحِلْمِ ○ وَاسْلُبْهُمْ مَدَدَ الْاِمْهَالِ ○ وَغُلَّ اَيْدِيَهُمْ وَارْبُطْ عَلٰى

www.sufimanzil.org

قُلُوْبِهِمْ ○ وَلَاتُبَلِّغْهُمُ الْاٰمَالَ ○ اَللّٰهُمَّ مَزِّقْهُمْ كُلَّ مُمَزَّقٍ مَزَّقْتَهُ
لِاَعْدَاءِكَ اِنْتِصَارًا لِّاَنْبِيَائِكَ وَرُسُلِكَ وَاَوْلِيَآئِكَ ○ اَللّٰهُمَّ لَا تُمَكِّنِ
الْاَعْدَآءَ فِيْنَا ○ وَلَا تُسَلِّطْهُمْ عَلَيْنَا بِذُنُوْبِنَا ○ حٰمٓ حٰمٓ حٰمٓ حٰمٓ حٰمٓ حٰمٓ
حٰمٓ حُمَّ الْاَمْرُ وَجَآءَ النَّصْرُ فَعَلَيْنَا لَايُنْصَرُوْنَ ○ حٰمٓ حُمَّ الْاَمْرُ وَجَآءَ
النَّصْرُ فَعَلَيْنَا لَايُنْصَرُوْنَ ○ حٰمٓ عٓسٓقٓ حِمَايَتُنَا مِمَّا نَخَافُ ○ اَللّٰهُمَّ قِنَا
شَرَّ الْاَسْوَآءِ وَلَا تَجْعَلْنَا مَحَلًّا لِّلْبَلْوٰى ○ اَللّٰهُمَّ اَعْطِنَا اَمَلَ الرَّجَاءِ
وَفَوْقَ الْاَمَلِ ○ يَاهُوَ يَاهُوَ يَاهُوَ يَامَنْ بِفَضْلِهٖ لِفَضْلِهٖ نَسْئَلُكَ الْعَجَلَ ٣
○ اِلٰهِي الْاِجَابَةَ اِلٰهِي الْجَابَةَ اِلٰهِي الْاِجَابَةَ ○ يَا مَنْ اَجَابَ نُوْحًا فِيْ
قَوْمِهٖ ○ يَامَنْ نَصَرَ اِبْرٰهِيْمَ عَلٰٓى اَعْدَائِهٖ ○ يَامَنْ رَدَّ يُوْسُفَ عَلٰى يَعْقُوْبَ
○ يَا مَنْ كَشَفَ ضُرَّ اَيُّوْبَ ○ يَامَنْ اَجَابَ دَعْوَةَ زَكَرِيَّا ○ يَامَنْ قَبِلَ
تَسْبِيْحَ يُوْنُسَ ابْنِ مَتّٰي نَسْئَلُكَ بِاَسْرَارِ اَصْحٰبِ هٰذِهِ الدَّعَوَاتِ اَنْ
تَتَقَبَّلَ مَابِهٖ دَعَوْنَاكَ ○ وَاَنْ تُعْطِيَنَا مَا سَئَلْنٰكَ ○ اَنْجِزْلَنَا وَعْدَكَ
الَّذِيْ وَعَدْتَّهٗ لِعِبَادِكَ الْمُؤْمِنِيْنَ ○ لَآ اِلٰهَ اِلَّآ اَنْتَ سُبْحَانَكَ اِنِّيْ كُنْتُ

www.sufimanzil.org

مِنَ الظّٰلِمِيْنَ ○ اِنْقَطَعَتْ اٰمَالُنَا وَعِزَّتِكَ اِلَّا مِنْكَ ○ وَخَابَ رَجَاءُنَا
وَحَقِّكَ اِلَّا فِيْكَ ○

---

اِنْ اَبْطَأَتْ غَارَةُ الْاَرْحَامِ وَابْتَعَدَتْ

عَنَّا فَاَسْرَعُ شَيْءٍ غَارَةُ اللّٰهِ

يَا غَارَةَ اللّٰهِ حُثِّي السَّيْرَ مُسْرِعَةً

فِيْ حَلِّ عُقْدَتِنَا يَا غَارَةَ اللّٰهِ

---

عَدَتِ الْعَادُوْنَ وَجَارُوْا ○ وَرَجَوْنَا اللّٰهَ مُجِيْرًا ○ وَكَفٰى بِاللّٰهِ وَلِيًّا وَّكَفٰى بِاللّٰهِ نَصِيْرًا ○ حَسْبُنَا اللّٰهُ وَنِعْمَ الْوَكِيْلُ ○ وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ الْعَلِيِّ الْعَظِيْمِ ○ اِسْتَجِبْ لَنَا اٰمِيْنَ ○ فَقُطِعَ دَابِرُ الْقَوْمِ الَّذِيْنَ ظَلَمُوْا وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ سُبْحَانَ رَبِّكَ رَبِّ الْعِزَّةِ عَمَّا يَصِفُوْنَ ○
وَسَلَامٌ عَلَى الْمُرْسَلِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○

**பொருள்:**

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் தொடங்குகிறேன்.

இறைவா! உன் மகத்தான கோபத்தின் மீது, எல்லை இல்லாத அதிகார சக்தியின் மீது நீ நல்லுதவி புரிந்து இரட்சிக்கும் வேகத்தின் மீது, உன் மகிமைக்குத் தாழ்வு நிகழும்போது உனக்கு எழும் ரோஷத்தின் மீதுஇ உன் அத்தாட்சிகளைப் பற்றிப்

www.sufimanzil.org

பிடித்து சீர்படுபவர்களுக்கு நீ வருஷிக்கும் கார்மானத்தின் மீது ஆணையாக! உன் திருமுன் இறைஞ்சுகிறோம்.

யா அல்லாஹ்! யாவையும் கேட்போனே, எங்களுக்கு மிக மிக அருகிலாகியுள்ளோனே, எங்கள் முறையீட்டை செவிமடுப்போனே, தீவிர சக்தி மிக்கோனே, (பாவிகளைக்) கடுமையாகப் பிடிப்பதின் மூலம் தண்டிப்போனே, மகத்தான சக்திமிக்கோனே, ரோஷமிக்கோனே, (உன் சிருஷ்டிகளில்) மகா பலமிக்கவனின் மட்டற்ற சீற்றமும் கூட (உன்னைப்) பணிய வைக்க இயலாத வண்ணம் மகத்துவம் கொண்டோனே, மாமன்னளர்களின் நாசக்காரர்களின் படுநாசம் கூட (உன்னை) மிகைக்க முடியாத ஆற்றல் மிக்கோனே, (பகைவன்) எனக்கு இழைக்கும் மோசத்தையும், அவன் புரியும் சதியையும் (திருப்பி) அவனுக்கே கேடாயும், நான் விழுவதற்காகவே அவன் பறிக்கும் படுகுழியில் அவனே வீழ்ந்து நாசமாகவும், என்னை ஏமாற்ற அவன் விரிக்கும் வலையில் அவனே அகப்பட்டுச் சிக்கிச் சிறையாக்கப்படவும் எங்கள் முதல்வனே! நீயே தண்டனை அளிப்பாயாக!

இரட்சகா! காப்-ஹா-ஜன்-யா-ஸாதின் மகிமையால் பகைவர்களின் தீங்கு எங்களை அணுகாமல் அப்பாலாக்கியருள்! நாசம் அவர்களையே சந்திக்கட்டும். உன் புனித நேசர்கள் அனைவருக்குமாக அவர்களே பலியாகட்டும். இம்மைஇ மறுமை இரண்டிலும் உன் நிகரற்ற சிட்சையை அவர்கள் மீது கொட்டி அடக்கியருள்.

இரட்சகா! அவர்கள் ஒற்றுமையைச் சிதறச் செய்! இறைவா! அவர்கள் கூட்டுறவைக் குலைத்து விடு. இரட்சகா! அவர்கள் தொகையைக் குறைத்து விடு. இறைவா! அவர்கள் வாளின் கூர்மையை மழுங்கச் செய்! இறைவா! அவர்கள் கும்பலை அவர்களுக்கே தண்டனையாக ஆக்கியருள்.

இரட்சகா! அவர்கள் மீதே உன் மகத்தான வேதனையை இறங்கச் செய். இறைவா! உன் பொறுமை என்ற வட்டத்தை விட்டும் அவர்களை அப்பாலாக்கி விடு. அவர்களுக்குக் கருணையாக நீ அருளியுள்ள தவணையை பறித்து விட்டு, அவர்கள் கரங்களில் விலங்கு பூட்டி, அவர்கள் இதயங்களைக் கட்டி விடுவதுடன், அவர்களின் நாட்டங்களும் நிறைவேறாமல் செய்தருள்.

இரட்சகா! உன் நபிமார்களுக்கும், திருத்தூதர்களுக்கும், ஒளலியாக்களுக்கும் உதவுவதற்காக நீ பகைவர்களைச் சின்னாப்பின்னப்படுத்தியது போல் எங்கள் பகைவர்களையும் சின்னாபின்னப்படுத்தி எங்களுக்கு உன் நல்லுருளை தந்தருள்வாயாக!

இரட்சகா! பகைவர்களை அடக்கி உன் நேசர்களுக்குச் சகாயம் புரிந்தது போல் எங்களுக்கும் உன் சிரேஷ்டமான கருணையை வருஷிப்பாயாக.

“இறைவா“! எங்கள் மீது பகைவர்களை சாட்டி விடாதே! எங்க்ள பாவங் காரணமாகப் பகைவர்கை எங்கள் மீது ஏவி விடாதே. “ஹா-மீம்“ (7தடவை) கருமங்கள் மீது நெருங்கி விட்டது. ஆகவே உன் கருணையை எங்கள் மீது வருஷித்து அருள் புரி.

www.sufimanzil.org

எங்களுக்குத் தண்டனையாக (எமது பகைவர்களுக்கு) உதவாமலிருக்கப் பிரார்த்திக்கிறோம். நாங்கள் அஞ்சிக் கிடக்கும் பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கு ஹா-மீம்-ஐன்-ஸீன்-காப் எங்களுக்குக் கேடயமாகத் திகழ வரம் அருள்வாயாக! இரட்சகா! பாவக் காரியங்களின் தீங்கை விட்டும் எங்களை பாதுகாப்பதுடன், உன் சோதனைகளுக்கு எங்களை ஆளாக்காமலும் காப்பாற்றி அருள்.

இரட்சகா! எங்கள் முறையீடுகளை மென்மேலும் சம்பூரணமாக்கியருள். யா-ஹூ(3 தடவை) உன் மகிமையின் மீது ஆணையிட்டு உன் திருவருளை யாசிக்கிறோம். (நஸ்அலுகல் அஜல- 3 தடவை) எங்கள் பிரார்த்தனையை ஏற்றுக் கருணை புரிய வேண்டுகிறோம். (3தடவை) நூஹு சமூகத்தார் விஷயத்தில் நூஹு நபியின் பிரார்த்தனையை ஏற்றவனே, இப்றாஹீம் நபியைப் பகைவர்களிடமிருந்து காத்து இரட்சித்தவனே, யூசுப் நபியை (அவர்கள் தந்தையார்) யாஃகூப் நபியிடமே சேர்த்தவனே, ஐயூப் நபியின் கஷ்டங்களை நிவர்த்தித்தவனே, ஜக்கரிய்யா நபியின் முறையீட்டை ஏற்றவனே, யூனுஸ் நபியின் தஸ்பீஹை ஏற்று அநுக்கிரஹம் புரிந்தவனே, இந்த முறையீட்டுக்காரர்களின் புனித மிக்க அகமியங்களின் மாண்பின் பொருட்டால் எங்கள் பிரார்த்தனைகளையும் ஏற்று எங்கள் முறையீட்டை நிறைவேற்றித் தர இறைஞ்சுகிறோம். மேலும், உன் மெய்யடியார்களான மூமின்களுக்கு உன் வாக்குறுதியை நிறைவேற்றி அருளியது போன்றே எங்களுக்கும் உன் சிரேஷ்டமான வாக்குறுதியைப் பரிபூரணமாக்கிக் கருணை புரி.

உன்னையன்றி வேறெந்த இரட்சகனும் இல்லை. நீயே மிகமிகத் தூயவன். நானோ அநீதக்காரனாய் (தாழ்ந்து) விட்டேன். எங்கள் நம்பிக்கையே விலகி நிற்கிறது. மகிமையும், மாண்பும் உனக்கே உரியவை. எங்கள் மேலெண்ணங்களெல்லாம் நிறைவேறாமல் இருக்கின்றன. (அவைகளை சம்பூரணமாக்கித் தரும்) அதிகாரம் உன்னிடமே உள்ளது.

உற்றார் உறவினர்களின் உதவியெல்லாம் இல்லையென்றாகி

அவர்களின் பாதுகாவலற்றுப் போனதும்

விரைந்தோடி வருவது அல்லாஹ்வின் நல்லுதவியேயாகும்.

அல்லாஹ்வின் நல்லுதவியே விரைந்தோடி வா. அல்லாஹ்வின் சகாயமே

எங்களை பிடித்துள்ள துன்ப முடிச்சுகளை அகற்றி

எங்களுக்கு நிம்மதி அளிக்க விரைந்து வா!

வரம்பு மீறியவர்கள் தங்கள் மீறுதலால் கொடுமை புரிந்து விட்டனர். எங்களைக் காப்பாற்ற உன்னிடமே நம்பிக்கை வைத்துள்ளோம். எனவே அல்லாஹ்வே, எங்களுக்குரிய பொறுப்பாளியாகவும், உதவியாளனாகவும் இருக்கிறான். எங்கள் நல்ல பொறுப்பாளி அல்லாஹ்வே. மகா சங்கையும், சர்வ சக்தியும் உடையவனான அல்லாஹ்வின் நல்லுதவியின்றி எங்களுக்கு பலமோ, திடமோ இல்லை. (இறைவா)

www.sufimanzil.org

எங்கள் பிரார்த்தனைகளை ஏற்று நல்லருள் புரிவாயாக! "எனவே, அநீதி இழைத்துக் கொண்டிருந்த அந்த ஜனங்களின் (சமூகத்தவரின்) வேர் அறுபட்டு விட்டது." சர்வ புகழும் அகிலம் அனைத்தையும் காத்து ரட்சிக்கும் அல்லாஹ்வுக்கே உரியதாகும்.

**ஓதவேண்டிய முறை:**

இரவில் இஷாத் தொழுகைக்குப் பின் ஆளரவம் அடங்கியபின் ஒளுச் செய்து விட்டு கல்பு (ஹுளூர்) பிரசன்னமான நிலையினனாக இரண்டு ரக்அத் நபில் தொழுகை தொழுது ஸலாம் கொடுத்தபின், அதே அத்தஹிய்யாத்து நிலையில் இருந்தவாறே, நாடிய மனிதனின் உருவை மனதில் எண்ணியவாறு "ஹஸ்புனல்லாஹு நிஃமல் வகீல்" என்ற திருவசனத்தை 450 தடவை ஓத வேண்டும். பின்னர் இருப்பிலிருந்தபடியே இந்த ஹிஸ்பை ஏழு தடவை ஓத வேண்டும்.இவ்விதம் தம் நாட்டம் நிறைவேறும் வரை நிறுத்திவிடாது தினம் ஓத வேண்டும்.(இதில் அஃதா என்று வரும் இடங்களில் யாருக்கு எதிராக ஓதப்படுகிறதோ அவனுடைய உருவத்தை மனக்கண் முன் கொண்டு வரவேண்டும்.)

மார்க்க முரணான காரியங்களுக்காகவோ, சுயநலத்திற்காகவோ ஓதினால் பலனளிக்காது போவதுடன் ஓதுபனுக்கே தீங்கு நேரிடும். ஓதுவதற்கு முறையான அனுமதி (ஹிஜாஸத்) பெற்று ஓதவும்.

ஹிஸ்புன் நஸ்ரு முடிந்தது.

www.sufimanzil.org